# <u>கேள்வி அறிவித்தல்</u>

## ஊர்காவற்றுறை பிரதேசசபை
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) – 2022

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, ஊர்காவற்றுறை பிரதேசசபை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிர்மாணிப்பு வேலைக்காக கோருகின்றார்.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரலுக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.
2. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவுசெய்திருப்பதுடன், கறுப்புப் பட்டியலில் (Black List) பெயர் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
3. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 5 (Section V) இலும், மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஊர்காவற்றுறை பிரதேச சபை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறையில், (தொலைபேசி: 021 221 1626) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **18.04.2022** முதல் **02.05.2022** ஆம் திகதி வரை மேற்கூறிய முகவரியில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான ஒரு தொகுதியை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை (தொலைபேசி இல : 021 221 1626) எனும் முகவரியில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பித்து **18.04.2022** முதல் **02.05.2022** வரை 9.00 மணியிலிருந்து 14.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா **2,000.00** இனைக் கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் மூலப்பிரதி, நகல்ப்பிரதி என தனித்தனியாக உறையிலிட்டு, **02.05.2022** திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, ஊர்காவற்றுறை பிரதேசசபை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை எனும் முகவரியில் நேரடியாகவோ, அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ மீள ஒப்படைத்தல் வேண்டும். கேள்விதாரர்கள் வேலைக்கான கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கீழ்வரும் வேலைக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் 02.05.2022 இல் இருந்து 63 நாட்கள் ஆகும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்.ரூபா) | ஒப்பந்த காலம் | CIDA தரம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(9)/ 2/2/2022/02 | சண்முகநாதன் பாடசாலை வீதி நிர்மாணிப்பு | 4.49 | 52 நாட்கள் | C8 & C7 (வீதி) | 45,000.00 | 01.08.2022 |

9. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் ஊர்காவற்றுறை பிரதேசசபை, தலைமை அலுவலகத்தில் **25.04.2022** ஆம் திகதி அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
10. இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். **CIDA**, பொது நிதிச் சுற்றறிக்கை இல **04/2016(iii)** இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும். அத்துடன் இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பனவும் பின்பற்றப்படும்."

09.04.2022.

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.